# <u>பொதுமக்களுக்கு ஓர் அறிவிப்பு</u>

தனியார் மற்றும் சிறுபான்மையற்ற சுயநிதிப் பள்ளிகளில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் 2021 – 2022 ஆம் கல்வியாண்டிற்கான நுழைவு நிலை ( LKG வகுப்பிற்கு மட்டும் ) வகுப்பில் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் இலவசமாக இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

**விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் நாள் : 05.07.2021 முதல் 03.08.2021 முடிய**

**( ஒவ்வொரு நாள் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை )**

## தகுதி :

LKG வகுப்பில் சேர்க்கை மேற்கொள்ள 31.07.2021 ன்படி 3 வயது நிரம்பியிருக்க வேண்டும்.

| **வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் எனில்** | **நலிவடைந்த பிரிவினரின் கீழ் எனில்** |
|---|---|
| ST,SC, SC (A), DNC, MBC, BC, BC(M) வகுப்பைச் சார்ந்தவர்கள்<br>**வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரில் சிறப்பு வகையினர்**<br>ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், மாற்றுப்பாலினத்தவர், எச்ஐவி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகள் | வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 200000 க்கும் குறைவான வருமானம் பெறும் அனைத்து வகுப்பினரும் |
| **Online விண்ணப்பத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்** | **Online விண்ணப்பத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்** |
| 1. குழந்தையின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம்<br>2. குழந்தையின் பிறப்புச் சான்றிதழ்<br>3. பெற்றோரின் அடையாள ஆவணம்<br>4. குழந்தையின் ஜாதிச் சான்றிதழ்<br>5. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரில் சிறப்பு வகையினர் எனில் சிறப்பு வகைக்கான சான்றிதழ் உரிய அலுவலரிடம் பெறப்பட வேண்டும். | 1. குழந்தையின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம்.<br>2. குழந்தையின் பிறப்புச் சான்றிதழ்<br>3. பெற்றோரின் அடையாள ஆவணம்<br>4. குழந்தையின் பெற்றோரின் வருமானச் சான்றிதழ் |

**குறிப்பு:**

செங்கல்பட்டு மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளிலும் நுழைவுநிலை வகுப்பு LKG என்பதால் LKG வகுப்பிற்கு மட்டும் சேர்க்கைகள் மேற்கொள்ளப்படும். சேர்க்கை கோரும் பள்ளி தங்கள் இருப்பிடத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருத்தல் வேண்டும்.